செ.வெ.எண்: 02 நாள்: 02.03.2020

**கரூர் மாவட்டம்**

**தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சார்பில் சமுதாய நலப்பணித்திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு ரூ.60.31 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.எம்.சி.சம்பத் மற்றும் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் ஆகியோர் வழங்கினார்கள்.**

அதன் விபரம் வருமாறு:

கரூர் மாவட்டம் புகளூரில் அமைந்துள்ள உள்ள தமிழ்நாடு செய்தித்ததாள் காகித நிறுவனத்தின் சார்பில், சமுதாய நலப்பணிகள் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி இன்று தமிழ்நாடு செய்தித்ததாள் காகித நிறுவன கூட்ட அரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:

மாண்புமிகு தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் உருவாக்கப்பட்ட இந்த காகித ஆலை நிறுவனத்தின் மூலம் சுற்றியுள்ள கிராமப்பகுதிகளின் மேம்பாட்டிற்காக சமுதாய நலப்பணிகள் திட்டத்தின் கீழ் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றது. கல்வி, மருத்துவம், உடல்நலம், சமூகவளர்ச்சி, பொருளாதார வாழ்வாதார மேம்பாடு, சுற்றுச்சூழல் மற்றும் சுகாதாரம், கலாச்சராரம் மற்றும் பாரம்பரிய வளர்ச்சி, மண்வளம் மற்றும் நீர்வளம் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சிப்பணிகளை தொடர்ந்து நமது காகித ஆலை நிறுவனம் செய்து வருகின்றது.

இன்று மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, சுகாதாரத்துறை, திருக்கோவில்கள் மற்றும் மசூதிகள் கட்டட மேம்பாடு, பள்ளிகளுக்கு உபகரணங்கள், மருத்துவமனைகளுக்கு உபகரணங்கள் என பல்வேறு திட்டங்களின் கீழ் ரூ,60.31 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றது.

திருச்சி மாவட்டம் முண்டிப்பட்யில் உள்ள தமிழ்நாடு காகித ஆலை நிறுவனத்தில் ஆண்டுக்கு 2லட்சம் டன் காகித அட்டைகள் தயாரிக்கப்படுகின்றது. நமது கரூர் மாவட்டத்தில் உள்ள காகித ஆலையில் ஆண்டுக்கு 4 லட்சம் டன் காகிதங்கள் தயாரிக்கப்படுகின்றது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருச்சி முண்டிப்பட்டியில் ரூ.1,100கோடி மதிப்பில் மரக்கூழ் தயாரிக்கும் ஆலை அமைக்க அடிக்கல் நாட்டி, அதற்கான பணிகள் முழுவீச்சில் நடைபெறவுள்ளது. விரைவில் அந்த ஆலை திறக்கப்படும்.

சமுதாய நலப்பணித்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்படும் நிதிகளை முழுமையாக பயன்படுத்தி அனைவருக்குமான திட்டங்களை செயல்படுத்திதருவது நமது காகித ஆலை நிறுவனம். நமது கரூர் மாவட்டத்தை தமிழகத்திலேயே முன்மாதிரி மாவட்டமாக உருவாக்கும் வகையிலான திட்டங்களை தமிழ்நாடு செய்தித்ததாள் காகித நிறுவனம் செயல்படுத்த வேண்டும். குறிப்பாக கரூர் நகராட்சியை முற்றிலும் சுற்றுச்சூழல் பாதிக்கப்படாத நகராட்சியாக, பிளாஸ்டிக் பயன்படுத்தாத நகராட்சியாக, மக்கும் குப்பை மக்காத குப்பைகளை முறையாகப் பிரித்தெடுத்து வழங்கும் நகராட்சியாக, முழுமையாக பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி பெற்ற நகராட்சியாக மற்ற நகராட்சிகளுக்கெல்லாம் முன்மாதிரியான நகராட்சியாக கரூர் நகராட்சியை உருவாக்க தேவையான அனைத்து திட்டங்களையும் தமிழ்நாடு செய்தித்ததாள் காகித நிறுவனம் சமுதாய நலப்பணிகள் திட்டத்தின் கீழ் நிறைவேற்றித்தர வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தாவது:

மாண்புமிகு தமிழக முன்னாள் முதலமைச்சர், பாரதரத்னா டாக்டர். புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் உருவாக்கப்பட்டு, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் விரிவுபடுத்தப்பட்டு, தற்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் முண்டிப்பட்டியில் ரூ.1,100 மதிப்பில் புதிய ஆலை வழங்கப்பட்டு, மூன்று தலைவர்கள் காலத்தில், மூன்று முதலமைச்சர்களால் மிகப்பெரிய நிறுவனமாக உயர்ந்திருக்கக்கூடியது தமிழ்நாடு காகித ஆலை நிறுவனமாகும். தொடர்ந்து லாபத்தில் இயக்கப்பட்டு, பல ஆயிரம் தொழிலாளர்களுக்கு நேரடியாகவும், பல லட்சம் தொழிலாளர்களுக்கு மறைமுகமாகவும் வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தரக்கூடியது இந்த காகித ஆலை நிறுவனம்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சராக இருந்த அம்மா அவர்கள் திருச்சி முண்டிப்பட்டியில் காகித அட்டைகள் உருவாக்கும் ஆலையை வழங்கினார்கள். தற்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ரூ.1,100 கோடி மதிப்பில் காகித கூழ் தயாரிக்கும் ஆலையை நிறுவ ஆணையிட்டு அதற்கான அடிக்கால் நாட்டி பணிகளை துவக்கி வைத்துள்ளார்கள். தமிழ்நாடு காகிதஆலை நிறுவனம் மென்மேலும் வளர்ந்து நாட்டின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருந்து, சமுதாய நலப்பணிகள் திட்டத்தின் கீழ் ஏழை, எளிய மக்களுக்கு தேவையான திட்டங்களை நிறைவேற்றித் தர வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

இவ்வாறு தெரிவித்தார்.

முன்னதாக கரூர் மாவட்ட தமிழ்நாடு காகித ஆலை நிறுவனத்தின் செயல்பாடுகள் குறித்து நிறுவனத்தின் உயர் அலுவலர்களுடன் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஆய்வுக்கூட்டம் நடத்தினார்கள். அதனைத்தொடர்ந்து, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறைக்கு மாற்றுத்திறனாளிகளின் பயன்பாட்டிற்காக ஆறு இருக்கைகள் கொண்ட ரூ.4.50லட்சம் மதிப்பிலான மின்கல வாகனத்தையும், ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு சிறப்பு சிகிச்சையளிக்கும் வகையில் கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு ரூ.5லட்சம் நிதியுதவியும், சென்னை அடையார் புற்று நோய் மையத்திற்கு ரூ.10லட்சம் நிதியுதவியும், வேலாயுதம்பாளையத்தில் உள்ள ஜீம்மா பள்ளிவாசல் கட்டுமானப்பணிக்கு ரூ.1லட்சம் நிதியுதவியும், தொழிலாளர் ஈட்டுருதி மருத்துவமனைக்கு மருத்துவ சாதனங்கள் மற்றும் உபகரணங்கள் வாங்கிக்கொள்ள ரூ.2லட்சம் நிதியுதவியும், மூலிமங்கலம் ஊராட்சி ஒனன்றிய நடுநிலைப்பள்ளியை முன்மாதிரி பள்ளியாக தரம் உயர்த்த ரூ.4.20லட்சம் மதிப்பில் உபகரணங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதகள், புகளூர் அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் பயன்பாட்டிற்காக மதிய உணவு சமையல் கூடம் மற்றும் உணவு அருந்தும் கட்டடம் கட்ட ரூ.5லட்சம் நிதியுதவியும், ஏழைகுடும்பத்தைச்சேர்ந்த 4 நபர்களுக்கு ரூ.95ஆயிரம் மதிப்பில் மருத்துவ நிதியுதவியும் என பல்வேறு திட்டங்களின் கீழ் ரூ.60,31,285 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் பயனாளிகளுக்கு வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தலைவர் திரு.என்.முருகானந்தம்.இஆப., கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.எஸ்.சிவசண்முகராஜா.இஆப., தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் காவல்துறைத்தலைவர் மற்றும் முதன்மை விழிப்புணர்வு அதிகாரி திரு.நஜ்மல் ஹோதா.இகா.ப., கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் திருமதி.ம.கீதா, காகித நிறுவனத்தின் செயல் இயக்குநர் (இயக்கம்) திரு.எஸ.வி.ஆர்.கிருஷ்ணன், முதன்மை பொது மேலாளர் (மனிதவளம்) திரு.பா.பட்டாபிராமன், முதன்மை பொது மேலாளர் (வணிகம் மற்றும் மின்னியல்) திரு.அ.பாலசுப்பிரமணியன், முதன்மை பொது மேலாளர் (உற்பத்தி) திரு.கு.தங்கராஜு, முதன்மை தகவல் அலுவலர் திரு.கே.மனோகரன், மற்றும் பொது மேலாளர்கள், துணை பொது மேலாளர்கள், உதவி பொது மேலாளர்கள் மற்றும் பணியாளர்கள் ஊராட்சி ஒன்றியத்தலைவர்கள் திரு.பாலமுருகன்(கரூர்), திரு.மார்கண்டேயக்(க.பரமத்தி), கூட்டுறவு சங்க பிரதிநிதிகள் திரு.கமலக்கண்ணன், திரு.என்.எஸ்.கிருஷ்ணன், பலர் கலந்து கொண்டனர்

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.